**செ. கு. எண்: 047** **நாள்: 17.03.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 17.3.2018</u>

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆர்.கோம்பை கிராமம், உட்கடை இருளக்கவுண்டன்பட்டியை சேர்ந்த திரு.நல்லுச்சாமி என்பவரின் மகள் செல்வி யுவராணி மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த திரு.முருகன் என்பவரின் மகள் செல்வி கோகிலா ஆகியோர் குளத்தில் குளிக்க சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு.வெள்ளையன் என்பவரின் மகன் திரு.முனுசாமி என்பவர் கட்டுமரத்தில் மீன் பிடிக்க சென்றபோது எதிர்பாராதவிதமாக கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், வீரப்பட்டி கிராமம், வவ்வாநேறி பகுதியைச் சேர்ந்த திரு. முரளிதரன் என்பவரின் மகன் செல்வன் ஜெயசூரியா மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த திரு.செந்தில்குமார் என்பவரின் மகன் செல்வன் லெட்சுமணன் ஆகியோர் ஊரணியில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசியிலிருந்து அன்னூர் நோக்கி சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்து நல்லாத்துப்பாலம் அருகில் விபத்துக்குள்ளானதில் அப்பேருந்திலிருந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் என்பவரின் மகன் திரு.கண்டப்பன் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கிட்டம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.வெங்கடாச்சலம் என்பவரின் மகன் திரு.கனகராஜ் ஆகியோர் பலத்த காயமடைந்து, மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட நிகழ்வுகளில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட ஏழு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**